வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம்
वी.ओ. चिदम्बरनार पत्तन प्राधिकरण
V.O.Chidambaranar Port Authority
(Ministry of Ports,Shipping & Waterways, Government of India)
Administrative Office, Harbour Estate, Tuticorin -628 004
Tamilnadu
Fax : 91-461-2352232
Email id : pro@vocport.gov.in
Website : www.vocport.gov.in

Certificate under :
IMS - ISO 9001:2015; ISO 14001:2015 & ISO 45001:2018 and ISPS compliant Port

**Press Release No: 24** **Date: 28.11.2025**

**VOC Port receives the first Clinker vessel in line with the MoU with Ambuja Cement Limited**

VOC Port has received the first clinker consignment in line with the Memorandum of Understanding (MoU) signed with Ambuja Cement Limited, Gujarat, on 19.11.2025, as part of the Minimum Guaranteed Tonnage-based Incentive Scheme for coastal clinkers. The MoU ensures coastal movement of 2,50,000 metric tonnes of clinker annually.

On 24.11.2025, as part of this MoU commitment, the vessel MV Lima Trader was berthed at NCB-II. It carried 56,440 metric tonnes of coastal clinker from Sanghi Port, Gujarat. The vessel was received by M/s Seaport Shipping as the ship agent and is being handled by M/s Seaport Logistics as the stevedore. The clinker will be transported by road to Ambuja's grinding unit at Mela Arasadi, Tuticorin, located around 24 kms from the Port, for further processing into cement.

Shri Susanta Kumar Purohit, IRSEE, Chairperson, in his message conveyed that this landmark shipment is a major step toward sustainable and cost-effective coastal transportation, aligning with the Government of India's vision for promoting coastal shipping. He also noted that more clinker vessels under this MoU are expected to call at the Port in the coming months, further strengthening cargo volumes and reinforcing the Port-and industry partnership.

The above details were furnished in a Press -Release by the V.O. Chidambaram Port Authority today.

Public Relations Officer

வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம்
वी.ओ. चिदम्बरनार पत्तन प्राधिकरण
V.O.Chidambaranar Port Authority
(Ministry of Ports,Shipping & Waterways, Government of India)
Administrative Office, Harbour Estate, Tuticorin -628 004
Tamilnadu

SAGARMALA
PORT-LED PROSPERITY
Certificate under :
IMS - ISO 9001:2015; ISO 14001:2015 &
ISO 45001:2018 and ISPS compliant Port

Fax : 91-461-2352232
Email id : pro@vocport.gov.in
Website : www.vocport.gov.in

**மக்கள் தொடர்பு அலுவலகம்**

**பத்திரிக்கை செய்தி :24** **நாள்: 28.11.2025**

## வ.உ.சி. துறைமுகம் அம்புஜா சிமெண்ட் லிமிடெட்டுடன் கையெழுத்திட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் முதல் கிளிங்கர் கப்பலை வரவேற்றது

வ.உ.சி. துறைமுகம் 19.11.2025 அன்று குஜராத்தைச் சேர்ந்த அம்புஜா சிமெண்ட் லிமிடெட்டுடன் கையெழுத்திட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் படி, முதல் கிளிங்கர் சரக்கை பெற்றுள்ளது. குறைந்தபட்ச உத்தரவாத சரக்கு (Minimum Guaranteed Tonnage-based Incentive Scheme) திட்டத்தின்படி அமைந்துள்ள இந்த ஒப்பந்தத்தில், வருடத்திற்கு 2,50,000 மெட்ரிக் டன் கிளிங்கர் உள்நாட்டு சரக்கு போக்குவரத்தின் மூலம் கொண்டுவரப்படும் என்று உறுதி வழங்கப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக, 24.11.2025 அன்று, வடக்கு சரக்குத்தளம்-2 (North Cargo Berth-II) கப்பல் தளத்தில் முதன் முதலாக MV Lima Trader என்ற கப்பல் மூலமாக கிளிங்கர் சரக்கு் வந்தடைந்தது. குஜராத்திலுள்ள சாங்கி துறைமுகத்திலிருந்து 56,440 மெட்ரிக் டன் கிளிங்கர் இந்த கப்பல் மூலமாகக் கொண்டு வரப்பட்டது. 13.1 மீட்டர் மிதவை ஆழம் கொண்ட இந்தக் கப்பலுக்கு M/s Seaport Shipping கப்பல் முகவராகவும், M/s Seaport Logistics சரக்குக் கையாளுநராகவும் (Stevedore) செயல்பட்டன.

இந்த கிளிங்கர் சரக்கு, துறைமுகத்திலிருந்து சுமார் 23.8 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ள மேல அரசடி, பகுதியில் உள்ள அம்புஜா சிமெண்ட் லிமிடெட்-டின் அரவை நிலையதிற்கு லாரிகள் மூலம் எடுத்துச் செல்லப்பட்டு, சிமெண்டு உற்பத்திற்கான செயலாக்கம் மேற்கொள்ளபடுகிறது.

இந்த நிகழ்வைக் குறித்து திரு. சுசாந்த குமார் புரோஹித், இ.ர.ப.மி.பொ., வ.உ.சி.துறைமுகத்தலைவர் அவர்கள் கூறுகையில், இந்த வரலாற்றுச் சரக்கு இறக்கம், நிலையான மற்றும் செலவு குறைவான உள்நாட்டு கப்பல் போக்குவரத்தை மேம்படுத்துவதில் ஒரு முக்கிய முன்னேற்றமாக அமைந்துள்ளது. மேலும் அவர் இது இந்திய அரசின் உள்நாட்டு கப்பல் போக்குவரத்தை ஊக்குவிக்கும் திட்டத்துடன் இசைந்து அமைந்துள்ளதாகக் குறிப்பிட்டார். இந்த ஒப்பந்தத்தின் கீழ், மேலும் பல கிளிங்கர் கப்பல்கள் வரவிருக்கும் மாதங்களில் வ.உ.சி துறைமுகத்திற்கு வருவதன் மூலம், துறைமுகத்தின் சரக்கு கையாளுதல் அதிகரிக்கப்பட்டு, துறைமுக-தொழில் இணைப்பு வலுப்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம் இன்று வெளியிட்டுள்ள பத்திரிக்கை செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

மக்கள் தொடர்பு அதிகாரி